**CC.No.435/2022 (JM.No.II, DHARMAPURI.)**

**29.07.2025**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

**(A1 , A2 , A3 ஆஜர் )**

**PW34:திரு.ராஜா த/பெ.சாமிநாதன்**

**முதல் விசாரணையின் தொடர்ச்சி**

**மோசடி இனம்-2**

**உண்மையான அடமான நகைகளை அபகரித்து போலி நகைகள் ஈடு வைத்து கையாடல்**

**1. அடமான நகைகள் கையாடல் ரூ.99,360/-**

22.03.2012 அன்று நகைகடன் எண். 5566 ன் படி திருமதி. பத்மினி என்பவரிடம் கட்டிங் மாடல் செயின் -2 மொத்த எடை 57.600 கிராம் மற்றும் முத்திரை காசு-4 மொத்த எடை 12.000 கிராம் அடமானம் பெறப்பட்டு அதன் ஈடுபேரில் ரூ.90,200/- கடன் வழங்கப்பட்டுள்ளது. நகைகடன் வழங்கியதற்கு அத்தாச்சியாக நகைகடன் பேரேடு பக்கம் 346/5 ல் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த பதிவுகளில் உள்ள பக்கம் எண். 346/5 ஏற்கனவே அ.சா.ஆ.44 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. நாள்வழி பேரேடு பக்கம் 178/1 ல் இவருக்கு நகைகடன் ரூ.90,200/- வழங்கியதற்கு கையிருப்பு குறைக்கப்பட்டுள்ளது. **01.11.2011 – 31.03.2012 வரை உள்ள நாள்வழிப்பேரேட்டில் பக்கம் 178/1 அ.சா.ஆ.264** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடன் தொகை வழங்கியதற்க அத்தாச்சியாக பற்றுசீட்டில் கடன்தாரர் கையொப்பம் பெறப்பட்டுள்ளது. **அந்த பற்று சீட்டு அ.சா.ஆ.265** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பற்று சீட்டில் உள்ள பத்மினியின் கையெழுத்து ஏற்கனவே அ.சா.ஆ.45 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. கடன் தொகையை அனுமதித்து குற்றம் இழைத்தவர் 1.செயலர் மற்றும் குற்றம் இழைத்தவர் 2. முதுநிலை எழுத்தர் / காசாளர் ஆகிய இருவரும் கையொப்பம் இட்டுள்ளனர். நாள்வழிபேரேட்டினை எழுத்தர் / முதுநிலை எழுத்தர்/ காசாளர் திரு.என்.முருகன் எழுதி இவர் மற்றும் சங்க செயலர் திருமதி.டி.ஜெயந்தி இருவரும் கையொப்பம் இட்டுள்ளனர். நகை கடன் பதிவேட்டில் நகைகள் ஈடு வைத்ததற்கு அத்தாச்சியாக கடன்தாரர் திருமதி. பத்மினி கையொப்பம் பெறப்பட்டுள்ளது. நகைகள் பாதுகாப்பில் உள்ளது என எழுத்தர் / முதுநிலை எழுத்தர் / காசாளர், செயலர் மற்றும் நகை மதிப்பீட்டாளர் ஆகிய மூவரும் நகைகடன் பதிவேட்டில் கையொப்பமிட்டுள்ளனர். 09.10.2013 அன்று சங்க தலைவர், சரக மேற்பார்வையாளர் அரூர், சங்க பணியாளர்கள் ஆகியோர்கள் முன்னிலையில் தருமபுரிமாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தீர்த்தமலை கிளை நகை மதிப்பீட்டாளர் திரு.ராம்குமார் என்பவரை வைத்து பாதுகாப்பு பெட்டகத்தில் உள்ள அடமான நகைகளை 100 சதவீதம் இருப்பு பரிசோதனை செய்த போது திருமதி. பத்மினி என்பவரிடம் பெறப்பட்ட அடமான நகைகளில் கட்டிங் மாடல் செயின் -2 போலி என்பதையும், முத்திரை காசுகள்-4 உண்மையான தங்க நகைகள் என்பதையும், நகை மதிப்பீட்டாளரால் ஊர்ஜிதம் செய்யப்பட்டது. கட்டிங் மாடல் செயின்-2 மொத்த எடை 57.600 கிராம் என்றும்,

முத்திரை காசுகள்-4 மொத்த எடை 12.000 கிராம் என்றும் 09.10.2013 அன்று தேதிய நகை மதிப்பீட்டாளர் வாக்குமூலம் அளித்துள்ளார். இந்த 6 உருப்படிகளும் என்னால் கைப்பற்றப்பட்டு புலன் விசாரணை அதிகாரியிடம் ஒப்படைத்தேன். கடன்தாரர் திருமதி.பத்மினி என்பவரை விசாரித்ததில் இவரது 22.11.2013 ம் தேதிய வாக்குமூலத்தில் இவர் நகைகடன் எண்.5566 ன் படி கட்டிங் மாடல் செயின் -1, முத்திரை காசுகள் -5 மொத்த உருப்படிகள்-6 அடமானம் பேரில் ரூ.90,200/- கடன் பெற்றதாகவும், இந்த நகைகளை இவர் இன்னும் மீட்கவில்லை என்றும், இது இவருடைய நகைகள் தான் என்றும், நகைகடன் வைத்ததற்கு அத்தாச்சியாக நகைகடன் பதிவேட்டிலும், கடன் தொகை பெற்றதற்கு அத்தாச்சியாக நகைகடன் பற்று சீட்டிலும் கையொப்பம் இட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். **பத்மினி கொடுத்த வாக்குமூலம் அ.சா.ஆ.266** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இதற்கு அத்தாச்சியாக நகை பொறுப்பாளர்கள் மற்றும் நகை மதிப்பீட்டாளர் கையொப்பமிட்டு வழங்கிய கைசார்பு விசாரணைக்கு ஆஜர்படுத்தவில்லை. ஆனால் நகைகடன் பதிவேடு படி இவரிடம் கட்டிங் மாடல் செயின் -2 மற்றும் 4 முத்திரை காசுகள் ஈடு பெற்றதாக பதிவுகள் உள்ளது. நகைகடன் பேரேட்டில் ஈடு நகைகள் விவரம், மொத்த எடை மற்றும் நிகர எடை ஆகிய விவரங்கள் திருத்தி எழுதப்பட்டுள்ளது.

சங்க செயலர் திருமதி.டி.ஜெயந்தி மற்றும் எழுத்தர் / முதுநிலை எழுத்தர் / காசாளர் திரு.என். முருகன் ஆகியோரை 12.12.2013 ம் தேதியும், நகை மதிப்பீட்டாளர் திரு.சி.சாமிஆச்சாரி என்பவரை 20.12.2013 ம் தேதியும் விசாரித்து வாக்குமூலம் பெற்றுள்ளேன். ஜெயந்தியின் வாக்குமூலம் ஏற்கனவே அ.சா.ஆ.261 ஆகவும், முருகனின் வாக்குமூலம் ஏற்கனவே அ.சா.ஆ.262 ஆகவும், சாமி ஆச்சாரியின் வாக்குமூலம் ஏற்கனவே அ.சா.ஆ. 263 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. விசாரணையில் திருமதி பத்மினி என்பவரிடம் பெறப்பட்ட உண்மையான அடமான நகைகளை மாற்றிவிட்டு போலி நகைகளை வைத்துள்ளதாக இவர்கள் மூவரும் வாக்குமூலம் அளித்துள்ளார்கள். இதிலிருந்து இவர்கள் மூவருக்கும் வழங்கப்பட்ட அதிகாரத்தை துஷ்பிரயோகம் மற்றும் நம்பிக்கை மோசடி செய்து மேற்படி கடன்தாரரின் கட்டிங் மாடல் செயின்-2 யை அபகரித்து அதற்கு ஈடாக போலி நகைகள் வைத்து உண்மையான அடமான நகைகளான கட்டிங் மாடல் செயின்-2 மொத்த எடை 57.600 கிராம் கையாடல் செய்துள்ளது விசாரணையில் ஊர்ஜிதமாகிறது. இதன் மார்கெட் மதிப்பு ரூ.99,360/- ஆகும்.

**(அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)**

ஒப்பம்/–இரா.சுஷ்மிதா,
நீதித்துறை நடுவர் எண்.2
தருமபுரி.